**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**OS. NO: 5329/2023**

**Deposition of: PW1** **DATE: 31.07.2025**

**NAME: M.Rajkumar**

**AGE: 56 Years**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்:**

**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தில் Assistant Manager Customer service planner என்ற பதவியில் இருந்தார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களில் எந்த ஆவணத்திலாவது 1ம் பிரதிவாதி Assistant Manager Customer service planner பதவி வகிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களில் Assistant Manager என்று மட்டும் உள்ளது, அவரது பணி Customer Service Planner என்று சாட்சி கூறுகிறார். நான் 1ம் பிரதிவாதி Customer Service Planner என்ற பதவியில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பதவி Assistant Manager அவரது வேலை Customer service Planner ஆகும். வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது ராஜினாமா கடிதத்தை யாரிடம் கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு ஞாபகமில்லை. நான் தான் 1ம் பிரதிவாதியின் மேல அதிகாரி என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி ராஜினாமா கடிதத்தை எந்த தேதியில் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. எங்கள் நிறுவனத்தில் 1ம் பிரதிவாதி போல் எத்தனை ஊழியர்கள் ராஜினாமா கடிதம் கொடுத்தார்கள் என்று என்னால்

சொல்ல முடியுமா என்றால் எத்தனை பேர்கள் கொடுத்தார்கள் என்று என்னால் துல்லியமாக சொல்ல இயலாது.1ம் பிரதிவாதியின் செயல் காரணமாக வாதி நிறுவனத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பு 1ம் பிரதிவாதி மீது எந்த தேதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அந்த தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. வா.சா.ஆ.10 ஆவணம் பொய்யாக இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களில் தேவையில்லாத வெளி கம்பெனிகளை இந்த வழக்கிற்காக பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்துடன் வேறு எந்த நிறுவனமும் சேர்ந்து இயங்கவில்லை என்றும், வாதி நிறுவனம் தனித்து இயங்குகிறது என்றும், 1ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தில் தான் பணிபுரிந்தார் என்றும், வேறு நிறுவனத்திற்கும் 1ம் பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னானல் வாதி நிறுவனத்துடன் பல்வேறு நிறுவனங்கள் சேர்ந்நது செய்யும் நடவடிக்கைகளில் 1ம் பிரதிவாதி பங்கு பெற்றார், ஆனால் வாதி நிறுவனத்தில் தான் 1ம் பிரதிவாதி பணிபுரிந்தார். 1ம் பிரதிவாதி மீது அவர் பணிபுரிந்த காலத்தில் தேவையில்லாத அவதூறுகள் மற்றும் அவருடைய நன்னடத்தையிலும் பழி போட்டதால் 1ம் பிரதிவாதி வாதி நிறுவனத்திலிருந்து உடனடியாக ராஜுனாமா செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தின் அதிக வேலைப்பளு, நன்னடத்தையில் சந்தேகம் மற்றும் சரியான ஊதியம் கிடைக்காததால் அவருக்கு மேல்இருக்கும் அதிகாரிகள் செய்யும் நடவடிக்கைகள் தாங்க முடியாமல் 1ம் பிரதிவாதி தனது வேலையை ராஜினாமா செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தில் பணிபுரிந்த வரை உரிய முறையில் பணிபுரிந்தார் என்றும், அவரது பணிக்காலத்தில் வாதி நிறுவனத்திற்கு

எந்தவித பண இழப்போ அல்லது வாதி நிறுவனத்திற்கு எந்தவித களங்கமோ ஏற்படுத்தவில்லை என்றும் 1ம் பிரதிவாதி பணிபுரிந்த 2 ஆண்டுகளில் நேர்மையாக பணிபுரிந்தார் என்றும், 1ம் பிரதிவாதிக்கு வாதி நிர்வாகம் குற்ற குறிப்பாணை வழங்கியதில்லை என்றும் சொன்னால் தெரியாது. அதனால் வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.